# உண்மை இறைவா உன்னைக்காணத் துடித்தேன்

உண்மைஇறைவா உன்னைக்காணத்துடித்தேன்
உந்தன்உறவில்இன்று என்னை இணைத்தேன்
வல்லவனுந்தன்பாதையில்
நல்லது காணும் ஆசையில் (2)
எல்லையில்லாதாகம் கொண்டுவந்தேன் - என்னை தந்தேன்

தாயன்பும் தந்தையன்பும்
மேலென்று நானிருந்தேன்
நீதரும்அன்பைக்கண்டால்
இதுவே மேலென்பேன்
எத்தனை கோடி மாந்தரும்
எந்தனை விட்டு ஓடினும்
இத்தரையில் எந்நாளும் என்னை நித்தம் அன்பு செய்யும்
நல்ல....... (உண்மை இறைவா......)

நான் பெற்ற செல்வமெல்லாம்
ஒருநாள் ஓடிவிடும்
நீதரும் அன்பு ஒன்றே
நிலையாய் கூடிவரும்
பட்டம் பதவி யாவும்மென்
பயணத்தில் மாறிவிடும்
நித்தம் என்னைக் காக்கும் உந்தன்
அன்பு ஒன்றே மாறாதய்யா ....... (உண்மை இறைவா...)